## மத்திய கலாசார நிதியம் - 2017

-----------------------------------------------

மத்திய கலாசார நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் அதிகாரச்சட்டத்தின் 9(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 9(4) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துபிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர, மத்திய கலாசார நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

(i) நியமத்தின் 29(இ) ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 9,138,563 தொகையான விசேட நிதியத்தின் 11 செயற்திட்டங்கள், ரூபா 4,817,900 தொகையான 05 வெளிநாட்டு நிதியத்தின் செயற்திட்டங்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 676,432 தொகையான வெளிநாட்டு செயற்திட்டத்தின் 01 செயற்திட்டம் என்பன தொடர்பாக அந்த நிதியங்களின் தன்மை, நிதியம் கிடைத்த ஆண்டு, நிதியம் எக்காரணத்திற்காக கிடைத்தது போன்ற தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் பொறுப்பில் காணப்பட்ட சட்ட ரீதியான உரித்து தொல்பொருளியல் திணைக்களத்திற்குச் சொந்தமான 2,139 தொல்பொருட்கள் தொடர்பாக நியமத்தின் 29(இ) ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

(i) நியமத்தின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் 03 மாதங்கள் அல்லது அதற்கு குறைவான காலத்தில் முதிர்ச்சியடைகின்ற முதலீடுகள், காசு மற்றும் காசுக்குச் சமமானவையான இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 633,450,476 பெறுமதியான குறுங்கால முதலீடுகள் மற்றும் பிரதான அலுவலகத்திலுள்ள சில்லறைக்காசு மீதியான ரூபா 225,217 தொகை காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,460,000 பெறுமதியான ரூபா 221,059,900 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீடு செயற்பாடுகளில் காசு வெளிப்பாய்ச்சலாக பதிவதற்குப் பதிலாக செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் வருகின்ற தொழிற்பாடு மூலதன மாற்றத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 06**

---

நியமத்தின் 29(ஏ) பந்தியின் பிரகாரம் இனங்காணப்பட வேண்டிய மற்றும் 28 ஆவது பந்தியின் பிரகாரம் அறிக்கைத் திகதியின் பின்னர் ஏற்படுகின்ற பொருண்மையான, இணங்காமைகள் ஏற்படுமாயின் அது தொடர்பாக வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நாணயமாற்றுப் பெறுமதி தொடர்ச்சியாக உயர்வடைந்து சென்றமையின் காரணமாக நிதியத்தின் அந்நிய செலவாணி பரிமாற்றக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பொருண்மையான தாக்கமொன்று ஏற்பட்டிருந்த போதிலும், அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

---

(i) நியமத்தின் 65 ஆவது பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக, ரூபா 126,292,230 கிரயமான மோட்டார் வாகனம் மற்றும் ரூபா 16,867,630 தொகையான கட்டிடம் என்பன முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றை பயன்படுத்துவதற்காக தயார் நிலைக்குக் கொண்டுவந்ததன் பின்னர் பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன் சொத்தொன்று இனங்காணப்பட்டு அகற்றப்பட்டதன் பின்னர் பெறுமானத்தேய்வு நிறுத்தப்பட வேண்டும். எனினும், அதற்கு முரணாக நிதியத்தினால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிற்காக முழுமையாக பெறுமானத்தேய்வு செய்தல் மற்றும் சொத்தினை அகற்றுகின்ற ஆண்டின் போது பெறுமானத்தேய்வு செய்யாமை என்ற கொள்கை பின்பற்றப்பட்டு, பயன்பாட்டிற்கு தயார் நிலைக்கு கொண்டுவரப்பட்ட திகதி கவனத்தில் கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 81,968,622 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் முழு ஆண்டிற்கும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

**(உ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09**

---

நியமத்தின் 15 ஆவது பந்தியின் பிரகாரம் கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி என்ற இரண்டிலும் குறைந்த பெறுமதியில் இருப்பு மதிப்பிடப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 06 செயற்திட்டங்களின் இறுதியிருப்பு நேரடியாக விற்பனை விலையில் மதிப்பிடப்பட்டு ரூபா 10,441,493 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளியீடுகள், நினைவுச் சின்னம் மற்றும் நுகர்வுப் பொருட்கள் பெறுமதியிடப்படுகின்ற அடிப்படை மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், நுழைவுச்சீட்டு இருப்பின் பெறுமதியிடப்பட்ட அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஆ) அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீடுகள் தொடர்பாக நிதியத்தால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற அறவிடப்படாத கடன்பட்டோர் மீதி ரூபா 3,388,452 தொகை மீளாய்வு செய்யப்படாமல் ரூபா 1,964,833 தொகையான அறவிடமுடியாக்கடன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) நிதியத்தால் மீளாய்வாண்டு முதல் பின் ஊழியர் நலன்களுக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஆண்டிற்குரிய ஒதுக்கீடுகளின் அளவை கணிப்பிடுவதற்காக இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம், நியமங்களை உருவாக்குகின்ற நிறுவனங்களின் அண்மைக்கால வெளியீடுகளின் பிரகாரம் எதிர்காலத்தில் ஊழியர் சம்பள அதிகரிப்பு, கழிவு விகிதம், ஊழியர் புரள்வு மற்றும் ஏனைய ஆயுட்கால எண்ணக்கருக்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஊழியத்திற்குப் பின்னரான நலன் ஒதுக்கங்களுக்கான கொள்கையொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் கொள்கையொன்று தயாரிக்கப்படாமல் ஊழியர்களினால் இறுதித் தடவையாகப் பெறப்பட்ட சம்பளம் மற்றும் சேவைக் காலத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு 2,562 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது பணிக்கொடையாக ரூபா 680,154,693 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 1.1 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தயாரிக்கப்படுகின்றமையும், அந்த நியமத்தை பயன்படுத்திக் கொள்வதற்கு முடியாதுள்ள சந்தர்ப்பத்தின் போது இலங்கை கணக்கீட்டு நியமம் ஈடுபடுத்துவதாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் நிதியத்தால் என்ன விடயங்களுக்காக எந்த கணக்கீட்டுக் கொள்கை பயன்படுத்தப்படுகின்றது எனவும், அதன் போது நிதியத்தின் கணக்கீட்டுக் கொள்கை என்ன என்பது தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் விளக்கமாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்பு மீதி ஐ.அ.டொலர் 1,460,000 தொகை மற்றும் நிர்மாணக் கணக்கின் மீதி ஐ.அ.டொலர் 246,398 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது, அத்திகதியில் காணப்பட்ட வெளிநாட்டு நாணய மாற்று விகிதமான ரூபா 150.9156 தொகையை அடிப்படையாகக் கொண்டு ரூபா பெறுமதி கணிப்பிடுவதற்குப் பதிலாக 2017 திசெம்பர் 29 இல் உள்ளவாறு காணப்பட்ட விகிதமான ரூபா 151.3076 தொகை ஈடுபடுத்தப்பட்டதன் காரணமாக வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் ரூபா 668,908 தொகை குறைவாகவும், வெளிநாட்டு நாணயமாற்று சேமிப்புக் கணக்கின் மீதி ரூபா 96,588 தொகை அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1985 - 2012 காலப்பகுதியில் தனியார், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து நிதியத்திற்குக் கிடைத்த ரூபா 428,110,000 தொகையான மூலதன மானியம் மற்றும் 1981 - 2011 காலப்பகுதியில் நிதியத்திற்குக் கிடைத்த ரூபா 226,754,060 தொகையான வெளிநாட்டு மூலதன மானியம், சீரான அடிப்படையில் பிற்போட்ட வருமானமாக இனங்காண்பதற்காக விளக்கமான கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங்காணப்படாமல் மீளாய்வாண்டில் பிற்போட்ட வருமானமாக ரூபா 22,597,491 தொகை கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடை ஒதுக்கீட்டுக் கணக்கின் மீதி ரூபா 680,154,693 ஆக இருந்த போதிலும், அதற்கு நேரொத்ததாக பேணப்பட்ட பணிக்கொடை முதலீட்டுக் கணக்கின் மீதி ரூபா 685,741,723 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 5,587,030 தொகையான வேறுபாடு இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட வெளியீட்டு இருப்பின் பெறுமதி ரூபா 17,541,033 ஆக இருந்த போதிலும், குறிப்பு இலக்கம் 12 இன் பிரகாரம் அது ரூபா 32,865,653 ஆகக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 15,324,620 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே குறிப்பிடப்படுகின்ற கணக்கு விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்கு விடயம் | | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| (அ) | ஊழியர் கடன்பட்டோர் | 94,368,893 | விரிவான பட்டோலை |
| (ஆ) | நுழைவுச் சீட்டு இருப்பு | 879,350 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |

## 2.3 பெறவேண்டிய கணக்குகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 05 வருடங்களை விஞ்சிய வீட்டுக் கடன், விழா முற்பணம் மற்றும் விசேட முற்பணக் கடன் மீதிகள் முறையே ரூபா 18,368,291 தொகை, ரூபா 433,010 மற்றும் ரூபா 87,991 தொகை ஆக இருந்ததுடன் அந்தக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நிதியத்தால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டம் | |
| (i) 4(உ) பிரிவு | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சகல விடயங்களையும் உள்ளடக்கும் வகையில் முறையான விதிக்கோவையொன்றை தயாரிப்பதற்கு ஆரம்பம் முதல் இதுவரையில் நிதியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 4(ஊ) பிரிவு | நிதியத்தின் நிதியை முதலீடு செய்வதற்கும் அந்த முதலீட்டை மீளப் பெற்றுக்கொள்வதற்கும் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெற வேண்டியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் போது நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 1,100,000,000 மற்றும் அமெரிக்க டொலர் 1,460,000 (ரூபா 220,343,200) தொகைக்காகவும், முதலீட்டை மீளப்பெறல் ரூபா 362,736,222 தொகைக்காகவும் கட்டுப்பாட்டுச் சபை அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. |
| (iii) 6(உ) பிரிவு | கலாசார முக்கோண வலயமாகக் காண்பிக்கப்பட்ட பிரதேசத்திற்கு உள்வருகின்ற பிரமுகர்களிடமிருந்தும் சுற்றுலா பிரயாணிகளிடமிருந்தும் கட்டணம் அறவிட முடியும் என காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக கலாசார முக்கோணத்திற்குரித்தற்ற காலி, றம்பாவிஹார, அபேகம, கதிர்காமம், யாபஹுவ மற்றும் பூதுறுவகல போன்ற மரபுரிமை இடங்களிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 36,082,437 நுழைவுச் சீட்டு வருமானம் பெறப்பட்டிருந்தது. |
| (ஆ) 1940 இன் 9 ஆம் இலக்க தொல்பொருள் கட்டளைச் சட்டம் | |
| (i) 21(1) ஆம் பிரிவு | • தொல்பொருளியல் ஆணையாளரால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரமொன்று அதிகாரத்தின் கீழ் மற்றும் அதன் நிபந்தனைகள் பிரகாரம் தவிர அல்லது 20 ஆவது பிரிவின் கீழ் உள்ளடக்கப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் தவிர ஏதாவது பாதுகாக்கப்பட்ட தூபிகளை மீள் நிர்மாணித்தல், திருத்தங்களை மாற்றுதல் அல்லது மேலதிக நிர்மாணங்கள் போன்ற பணிகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்த போதிலும், தொல்பொருள் பெறுமதியுடைய 04 விகாரைகளுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செய்வதற்காக தொல்பொருள் ஆணையாளரிடமிருந்து பெறப்பட்ட அனுமதி தொடர்பாக பரீட்சிக்கப்படாமல் நிதியத்தால் மீளாய்வாண்டில் ரூபா 906,996 பெறுமதியான நன்கொடைப் பணம் வழங்கப்பட்டிருந்தது. |

- றுவன்வெலிசாய மணல்திட்டை (வெலிமழுவை) பாதுகாப்பதாற்காக மீளாய்வாண்டில் ரூபா 25,053,596 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அச்செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு தொல்பொருள் ஆணையாளரிடமிருந்து பெறப்பட்ட அனுமதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை
---------------------------------------------------

| | |
|---|---|
| (i) II ஆம் அத்தியாயத்தின் 1:2 ஆம் பிரிவு | மத்திய கலாசார நிதியத்தால் தாபன விதிக் கோவைக்கு முரணாக பணிப்பாளர் (சமயம்), பணிப்பாளர் (திட்டம்), வேலை பொறியியலாளர், செயற்திட்ட இணைப்பு பணிப்பாளர், பரிசோதனை உத்தியோகத்தர் போன்ற புதிய பதவிகளை தோற்றுவித்தல் மற்றும் ஆட்சேர்ப்புக்கள் என்பன இடம்பெற்றிருந்தன. மேலும், நிதியத்தின் அல்லது தொல்பொருளியல் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை பதவியில் உள்ளடக்கப்படாத 2271 காவலாளிகள் மற்றும் 1130 தொழிலாளர் என 3401 ஊழியர்கள் கட்டுப்பாட்டுச் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் தொல்பொருளியல் திணைக்களத்திற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். |
| (ii) II ஆம் அத்தியாயத்தின் 9:1 ஆம் பிரிவு | அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்ற ஒருவர் அரசாங்க சேவையின் பதவியொன்றில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது அரசாங்க கூட்டுத்தாபனத்தில் சேவையில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது அமைச்சரவையின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், பரீட்சிக்கப்பட்ட 29 ஆளணிக் கோவைகளில் 08 கோவைகளுக்குரிய உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களாக இருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களுக்காக அமைச்சரவையின் முன் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. |
| (iii) II ஆம் அத்தியாயத்தின் 13:4 ஆம் உப பிரிவு | வெற்றிடமாகக் காணப்படுகின்ற பதவியொன்றில் பதிற் கடமைக்காக அந்த பதவியைப் புரிவதற்கு எல்லா வகையிலும் பூரணமான தகைமை பெறாத உத்தியோகத்தரை நியமிக்க முடியாது. எனினும், ஆட்சேர்ப்பு நடைமுறையின் 4.3.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் தகைமை பெறாத உத்தியோகத்தர் ஒருவர் சிகிரிய செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமையாளர் பதவியில் கடமை மேவுகை செய்வதற்காக 2017 ஒக்தோபர் 02 ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தார். |

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

-----------------------------------------------------

| | |
|---|---|
| நிதிப்பிரமாணம் 381(1) | நிதியத்தால் 2017 மார்ச் 28 ஆந் திகதி முதல் வெளிநாட்டு செலாவணித் தொகையில் (ஐ.அ.டொலர்) சேமிப்புக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டு கொடுக்கல் வாங்கல்கள் பேணிச் செல்லப்படுகின்ற போதிலும், அதற்காக பெறவேண்டிய திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

(உ) அரச நிர்வாகச் சுற்றறிக்கை

-------------------------------------------

| | |
|---|---|
| (i) 2007 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 09/2007(i) ஆம் இலக்க சுற்றறிக்கை | • வயது 60 வருடங்களை விஞ்சிய ஓய்வூதியக் காரரை அரசாங்க சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்த முடியாதிருந்த போதிலும், மத்திய கலாசார நிதியத்தால் சேர்க்கப்பட்ட திகதியில் வயது 60 வருடங்களை விஞ்சிய 05 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது<br><br>• வயது 67 வருடங்களை விஞ்சிய பூர்த்தி செய்த எந்த ஒருவரும் எந்தக் காரணத்தினாலும் அரசாங்க சேவையில் நியமிக்கப்பட முடியாது. எனினும், பரீட்சிக்கப்பட்ட ஓய்வுபெற்ற 09 ஓய்வுபெற்ற 03 உத்தியோகத்தர்களின் கோவைகளுக்கிடையே 67 வயதை விஞ்சிய ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் போக்குவரத்து ஆலோசகர், பாதுகாப்பு உத்தியோகத்தர், நூதனசாலை தொடர்பான ஆலோசகர் என்ற பதவிகளில் இருக்கின்றமை அவதானிக்கப்பட்டது.<br><br>• ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவர் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற கால எல்லையில் நிறுவனத் தலைவரினால் பொருத்தமான பதிலீட்டாளர் ஒருவர் இனங்காணப்பட வேண்டியிருந்ததுடன், அந்த உத்தியோகத்தர்களை பயிற்சியளிக்கும் பணிகள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற ஓய்வுபெற்ற உத்தியோகத்தரின் பொறுப்பாக அவருக்கு கையளிக்கப்பட வேண்டும். எனினும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் தொடர்ச்சியாக அந்த உத்தியோகத்தரின் சேவை நீடிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ii) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க சுற்றறிக்கை - 7 ஆம் பந்தி | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிதியத்தில் ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றிருந்தது. |

| | | |
|---|---|---|
| (iii) | 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 15.2 உபபிரிவு | ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நபர்களின் சம்பளம் காணப்பட்ட ஒப்பந்த காலஎல்லையில் திருத்தஞ் செய்ய முடியாது. எனினும், போக்குவரத்து ஆலோசகர் (தொழில்நுட்ப) உத்தியோகத்தரின் சம்பளம் கட்டுப்பாட்டு சபை பத்திரத்தின் மூலம் ரூபா 15,000 முதல் ரூபா 30,000 வரை ஒப்பந்தக் காலஎல்லையில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. |
| (iv) | 2016 ஏப்ரல் 25 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 03(i) மற்றும் 3(ii) ஆம் பந்திகள் | (i) சுற்றறிக்கையின் பிரகாரம் 20 சதவீத விசேட கொடுப்பனவு மற்றும் இடைக்காலப் படியாக ரூபா 10,000 தொகை புதிய சம்பளக் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், நிதியத்தால் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மேற்கூறப்பட்ட விசேட படி மற்றும் இடைக்காலப் படி என்பவற்றை உள்ளடக்கி சம்பளம் செலுத்தியிருக்கின்றமை தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் பரீட்சிக்கப்பட்ட 04 கோவைகளுக்குரிய 04 உத்தியோகத்தர்களுக்காக 2016, 2017 மற்றும் 2018 யூலை மாதம் வரை விசேட படியாக ரூபா 403,470 தொகையும், இடைக்காலப் படியாக ரூபா 457,689 தொகையும் அதற்குரிய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றிற்கான பங்களிப்பு (12% + 3%) ரூபா 129,185 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 990,344 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>(ii) 19.2 ஆம் பந்தியின் பிரகாரம் 2006 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் வழங்கப்பட்ட நியமனத்திற்காக முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 30 இன் பிரகாரம் குறித்த சம்பள படிநிலையின் ஆரம்ப தரத்தில் ஆரம்ப சம்பள படிநிலையே உரித்தாக வேண்டும். எனினும், மத்திய கலாசார நிதியத்தால் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக அதற்குரிய சம்பள படிநிலையில் வைத்து சம்பளம் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பரீட்சிக்கப்பட்ட 05 கோவைகளுக்கிடையே 04 உத்தியோகத்தர்களுக்குரியதாக மேற்கூறப்பட்ட சம்பளப்படி நிலையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட உத்தியோகத்தருக்காக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 450,821 ஆகும். |

(ஊ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை

-----------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | 2015 மே 25 ஆந் திகதிய PED/1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் 2 ஆம் உப பந்தி | பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தாக்க வேண்டிய மாதாந்த எரிபொருள் 150 லீற்றர் ஆக இருந்த போதிலும், 2016 சனவரி முதல் 2017 ஆகஸ்ட் வரையான 20 மாத கால எல்லைக்காக மாதாந்தம் 170 லீற்றர் வீதம் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எல்லையை விஞ்சி செலுத்தப்பட்ட எரிபொருளுக்காக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 51,200 தொகையை உரிய உத்தியோகத்தரிடமிருந்து அல்லது பொறுப்புவாய்ந்த நபரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 3.1 ஆம் பந்தியின் 4 ஆம் உப பந்தி | 2006 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் MSD 30 இன் பிரகாரம் HM 1-1 கணிப்பீடு அல்லது அதற்கு மேல் அந்த திணைக்களத்திலிருந்து அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றில் ஈடுபட்டிருக்கின்ற வேறு எந்தவொரு உத்தியோகத்தரும் 120 லீற்றர் மாதாந்த எரிபொருள் படியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்தைப் பெறுவதாக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், அதற்கு முரணாக 08 உத்தியோகத்தர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையை விஞ்சி மேலதிகமாக ரூபா 243,930 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த தொகையை உரிய உத்தியோகத்தரிடமிருந்து அல்லது பொறுப்பான நபரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(எ) அரச நிதிச் சுற்றறிக்கை

--------------------------------------

| | |
|---|---|
| 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் 4.1(இ) பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டிற்கு புறம்பாக உரிய நிதி ஆண்டின் போது எந்தவித செலவினமொன்றும் செய்யமுடியாதிருந்தது. அதாவது பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதி ஒதுக்கப்படாதிருக்கும் போது இணையத்தளம் மூலம் இலத்திரனியல் நுழைவுச்சீட்டு விநியோகிக்கும் செயற்திட்ட பணிக்காக கணனி மற்றும் துணைப்பாகங்கள் மூலம் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக நிதியத்தால் 2017 ஆம் ஆண்டில் ரூபா 391,180 மூலதனச் செலவினம் செய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஏ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2011 யூலை 21 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ1/54/9/241 ஆம் இலக்க கடிதம் | கடிதத்தின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முறையான அங்கீகாரமின்றி அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக புதிய பதவியை உருவாக்குதல் மற்றும் 2011 யூன் 30 அந் திகதியின் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது. அதாவது நிதியத்தால் பல்வேறு செயற்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு பணிப்பாளர் (சமயம்), பணிப்பாளர் (திட்டமிடல்), வேலை பொறியியலாளர், செயற்திட்ட ஒருங்கிணைப்பு பணிப்பாளர், பரீட்சிப்பு உத்தியோகத்தர் போன்ற பதவிகளுக்காக ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். |

## 2.5 போதியளவான அதிகார பலத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 4(இ) உப பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிதியத்தால் உற்பத்தி செய்யப்பட்ட ரூபா 5,548,700 பெறுமதியான நினைவுச் சின்னம் மற்றும் அச்சிடல்கள் ரூபா 375,093 வெளியீட்டு நன்கொடைகளுக்காக கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 1,471,822,640 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,696,834,303 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதி விளைவுகள் ரூபா 225,011,663 இனால் அதாவது 13.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் மொத்த வருமானம் ரூபா 669,493,497 இனால் அதிகரித்திருந்த போதிலும், சம்பளம், வேதனம் மற்றும் ஊழியர் நலன்புரிச் செலவினம் ரூபா 303,022,305 இனாலும், ஏனைய செலவினம் ரூபா 544,504,410 இனாலும், ஒப்பந்த சேவைச் செலவினம் ரூபா 22,997,847 இனாலும், வழங்கல் மற்றும் நுகர்வுச் செலவினம் ரூபா 13,309,772 இனாலும் அதிகரித்திருந்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்கையில் 2013 ஆண்டின் போது ரூபா 302,069,090 தொகையான மிகை 2016 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்திருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் போது வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும், நிதிவிளைவில் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைச் சீராக்கியதன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,065,769,479 தொகையான பங்களிப்பு 2016 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 3,034,217,986 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 2,974,285,411 வரை குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட நிறுவனத்தால் நீண்டகால நோக்கத்துடன் உரிய சட்டத்தினால் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்ளும் இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். எனினும், நிதியத்தால் 2017 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் நிதியத்தால் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களுக்குரிய அகழ்வு, பாதுகாப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பான வேலைத்திட்டமொன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

#### 4.1.2 செயற்படு நிலையும் மீளாய்வும்

நிதியத்தால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த பணிப்பொறுப்புக்கள் மற்றும் அடையப்பட்ட செயல்முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுற்றுலா சபை இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை இலங்கைக்கு வந்துள்ள உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை மற்றும் நிதியத்தின் பதிவேடுகளின் பிரகாரமும் நிதியத்தினால் விற்பனை செய்யப்பட்ட உல்லாசப் பிரயாணிகளின் நுழைவுச் சீட்டுக்களின் எண்ணிக்கைக்கும் இடையே ஆன பகுப்பாய்வு ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

| **ஆண்டு** | **இலங்கை வந்துள்ள உல்லாச பிரயாணிகளின் எண்ணிக்கை** | **நிதியத்தினால் விற்பனை செய்திருந்த உல்லாசப் பிரயாணிகளுக்கான நுழைவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை** | **உல்லாசப் பிரயாணிகளுக்கு ஒப்பாக விற்பனை செய்திருந்த நுழைவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை சதவீதமாக** |
|---|---|---|---|
| 2013 | 1,274,593 | 504,699* | 39* |
| 2014 | 1,527,153 | 627,136 | 41 |
| 2015 | 1,798,380 | 722,676 | 40 |
| 2016 | 2,050,832 | 923,204 | 45 |
| 2017 | 2,116,407 | 994,556 | 46 |

* ஒரு உல்லாச பிரயாணியினால் ஒரு தொல்பொருளியல் நிலையம் மாத்திரம் பார்வையிட்டதாக அனுமானித்து கணக்கிடல் மேற்கொள்ளப்பட்டது.

மேற்கூறிய தகவல்களின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை இலங்கைக்கு வந்திருந்த உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கைக்கு ஒப்பாக நிதியத்தினால் விற்பனை செய்திருந்த நுழைவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை 39 சதவீதத்திற்கும் 47 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. அதன் பிரகாரம் பழமை வாய்ந்த புராதன கலாசார எச்சங்கள் உடைய இடங்களை பார்வையிடல் மற்றும் மத விவகாரங்களின் மேம்பாட்டுக்காக உல்லாச பிரயாணிகளை ஈர்ப்பதற்காக விற்பனை மேம்பாட்டு நடைமுறை ஒன்றினை அமுல்படுத்துவதன் ஊடாக மேலும் வருமானத்தை அதிகரிக்க செய்வதற்கு இயலுமை ஒன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதியத்தால் தயாரிக்கப்பட்ட வேலைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட 35 செயற்பாடுகளுக்குரிய மதிப்பீட்டு நிதிஏற்பாட்டையும் உள்ளபடியான செலவினத்தையும் ஒப்பீடு செய்த போது சேமிப்பு 10 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சைக் கொண்டிருந்தது.

(இ) நிதியத்தின் வருடாந்த வேலைத்திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 439,938,818 தொகையான உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி, பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்ற 34 செயற்பாடுகள் நிதியத்தால் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வருடாந்த வேலை மட்டத்திற்குப் புறம்பாக மீளாய்வாண்டின் போது 04 செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 6,066,320 ஆகும்.

(உ) வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளில் எதிர்பார்த்த பூர்த்தி / விளைவுகள் வேலைத்திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) கலாசார மற்றும் சமய இடங்களின் திருத்த நடவடிக்கைகளுக்காக கட்டம் 1 மற்றும் கட்டம் 2 இன் கீழ் 19 மாவட்டங்களில் அமைந்துள்ள 965 சமய நிலையங்களுக்காக நிதியத்தால் ரூபா 497,741,581 தொகை நன்கொடையளிக்கப்பட்டிருந்தது. 965 சமய நிலையங்களுக்கிடையே 316 சமய நிலையங்கள் அதாவது 33 சதவீத அளவு குருணாகல் மாவட்டத்தின் விகாரைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மொத்த நன்கொடைப் பெறுமதியின் பிரகாரம், எடுக்கப்படுமாயின் அது 26 சதவீதம் மாத்திரமாக இருந்தது. மேலும் நன்கொடையாக வழங்கப்பட்ட மொத்த சமய நிலையங்களின் அளவிற்கு ஒப்பாக ஒரு மாவட்டத்திற்காக வழங்கப்பட்ட நன்கொடைப் பெறுமதியின் சதவீதம் 01 இற்குக் குறைவான 04 மாவட்டங்களும், 01 சதவீதத்திற்கும் 05 சதவீதத்திற்கும் இடையே 08 மாவட்டங்களும், 06 சதவீதத்திற்கும் 10 சதவீதத்திற்கும் இடையே 05 மாவட்டங்களும், 10 சதவீதத்திற்கும் 15 சதவீதத்திற்கும் இடையே 01 மாவட்டமும் காணப்பட்டன. அவ்வாறே 05 மாவட்டங்களுக்காக எந்தவொரு நன்கொடைத் தொகையும் வழங்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நன்கொடை வழங்கும் போது நிதியத்தால் நியாயமான அடிப்படையின் கீழ் ஒட்டுமொத்த நாட்டையும் மேவுகை செய்யும் வகையில் முறையாக திட்டமொன்றைத் தயாரித்து செயற்படுத்தவதற்குத் தவறியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பு பிரதான அலுவலகத்தில் அமைந்துள்ள நிலத்தின் சட்டரீதியான உரித்தை நிதியத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு 2018 செப்தெம்பர் 30 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்வி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் காணப்பட்ட அபேகம நிறுவனத்தின் மேற்பார்வை நடவடிக்கைகள் மத்திய கலாசார நிதியத்திற்கு கையளிப்பதற்காக இருதரப்பினராலும் 2016 யூன் 16 ஆந் திகதிய ஈடீ/10/என்எச்/03/02/01/07 ஆம் இலக்க புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. உடன்படிக்கையின் 08 ஆம் பந்தியின் பிரகாரம் உடனடியாக செயற்படும் பிரகாரம் அபே கம நிறுவனத்தின் சகல கட்டிடங்கள் மற்றும் பொருட்களை முறையான பிரகாரம் கல்வி அமைச்சிலிருந்து கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், நிதியத்தால் 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி வரை அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) இணையத்தள மூலம் இலத்திரனியல் நுழைவுச்சீட்டு விநியோகத்தில் செயற்திட்டத்தின் நோக்கம், பணிகள், அதற்குரிய கால அட்டவணை, பொறுப்பு வாய்ந்த தரப்பினர், மனித மற்றும் பௌதீக வளங்களின் தேவை மற்றும் செய்வதற்கு ஏற்பட்ட கிரயம் தொடர்பாக சரியான இனங்காணலோ அல்லது அது தொடர்பாக சாத்தியவள ஆய்வொன்றோ நிதியத்தால் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக இணையத்தளம் மூலம் நுழைவுச்சீட்டு விநியோகிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் தவறியிருந்ததுடன் இணையத்தளம் ஊடாக கொடுப்பனவுகள் மாத்திரம் இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2010 நவம்பர் 20 ஆந் திகதிய பீஎப்/4/சீஎம்/1(Cir) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 2.2 இன் பிரகாரம் இலத்திரனியல் ஊடகம் மூலம் கொடுப்பனவுகளைச் செய்வதற்குத் தேவையான அதிகாரம் மற்றும் பொறுப்புக்களை ஊழியர்களுக்கு வழங்குதல் மற்றும் அந்த கொடுப்பனவுகளுக்காக பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் பாதுகாப்பு முறைமைகளை ஏற்படுத்துதல் அரசாங்க நிறுவனங்களின் தலைவரால் மேற்கொள்ளப்பட

வேண்டும். அதன் பிரகாரம் இணைய தளம் ஊடாக இலத்திரனியல் நுழைவுச்சீட்டுக்களை விநியோகிக்கும் முறைமையொன்றை சரியான பிரகாரம் அமுல்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப அறிவுடன் உள்ள ஊழியர்களை நிதியத்தில் சேவையில் ஈடுபடுத்துதல் தேவையாக இருந்த போதிலும், அவ்வாறான பதவியணியொன்றை சேர்த்துக் கொள்வதற்கு நிதியத்தால் இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தற்போது அமுல்படுத்தப்படுகின்ற இணைய தளம் மூலம் கொடுப்பனவு செய்யும் முறைமையை செயற்படுத்துவதற்காக, அறிவுடைய பதவியணியொன்று நிதியத்தில் இல்லாமையினால் முறைமையின் நிர்வாக நடவடிக்கைகள் இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்புகள் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது நிதியத்தின் தகவல்களின் இரகசியத்தன்மை தொடர்பில் தாக்கமொன்றை ஏற்படுத்துகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) மத்திய கலாசார நிதியத்திற்காக கெப் வண்டியொன்றைக் கொள்வனவு செய்வதற்காக 2016 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட ஆரம்ப பரீட்சிப்பின் போது 11 உத்தியோகத்தர்களுக்கு குற்றச்சாட்டுக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதனிடையே தெரிவு செய்யப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் முறையான ஒழுக்காற்று பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் முறையான ஒழுக்காற்று பரிசோதனை 2018 நவம்பர் 06 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்வதற்கு நிதியம் தவறியிருந்தது. ஏனைய 08 உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான ஒழுக்காற்று விசாரணை ஆரம்பிக்கப்படாமை சர்ச்சைக்குரிய விடயமொன்றாக அவதானிக்கப்பட்டது.

(எ) மத்திய கலாசார நிதியத்தின் திருகோணமலை செயற்திட்டத்தில் சேவையாற்றிய ஊழியர் ஒருவருக்குச் செலுத்த வேண்டிய பணிக்கொடைப்பணம் குறைத்துச் செலுத்தப்பட்டமையின் காரணமாக மிகைக் கட்டணமாக ரூபா 30,423 தொகை நிதியத்திலிருந்து செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நினைவுச் சின்ன உற்பத்தி, வெளியீடுகள் மற்றும் அச்சகம் போன்ற பிரிவுகளில் உற்பத்தியின் கிரயத்தை கணிப்பிடும் போது மீளாய்வாண்டிற்குரிய நேர்ச் செலவினம் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்ததுடன், சுழற்சிக் கிரயம் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நினைவுச் சின்ன உற்பத்தியில் உற்பத்திக் கிரயத்தை சரியாக இனங்கண்டதன் பின்னர் விற்பனை விலையைத் தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டிற்கான செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அனுராதபுரம் மஹாவிகாரை செயற்திட்டத்தின் கட்டிட பராமரிப்பு, விஞ்ஞான ரீதியான பராமரிப்பு மற்றும் நாளாந்த பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் றுவன்வெலிசாய மணல் திட்டை பாதுகாப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட ஊழிய மனித நாட்களின் எண்ணிக்கை 13914 ஆக இருந்ததுடன் வேலைசெய்த மனித நாட்களின் எண்ணிக்கை 20,358 ஆக இருந்தது. இதன் பிரகாரம் மதிப்பீட்டை விஞ்சி 6444 மனித நாட்களுக்காக ரூபா 11,920,937 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(இ) நிதியத்தால் மரபுரிமை இடங்களைப் பார்வையிடுவதற்காக வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு விநியோகிக்கப்படுகின்ற நுழைவுச் சீட்டுக்கள் நிதியத்தின் கொழும்பு 07 இல் அமைந்துள்ள அச்சகப் பிரிவில் அச்சிடப்படுகின்றது. அதற்காக 300 GSM தடிப்புடன் நீளம் மற்றும் அகலம் முறையே 900 மில்லிமீற்றர் மற்றும் 600 மில்லிமீற்றர் தாள் பயன்படுத்தப்பட்டு 285 மில்லிமீற்றர் நீளமும் 88 மில்லிமீற்றர் அகலமுமான நுழைவுச்சீட்டு அச்சிடப்படுகின்றது. அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் சிகீரியா போன்ற மரபுரிமை இடங்களுக்காக விநியோகிக்கப்படுகின்ற நுழைவுச் சீட்டின் பௌதீக அளவின் பிரகாரம் கடதாசியில் அச்சிடப்பட, வேண்டிய நுழைவுச்சீட்டின் அளவு மற்றும் அச்சிடப்பட வேண்டிய நுழைவுச்சீட்டின் அளவு மற்றும் அச்சிடப்பட்ட நுழைவுச்சீட்டின் அளவு தொடர்பான பரீட்சிப்பின் போது 2015 முதல் 2017 வரையான ஆண்டுகளுக்காக 319,794 நுழைவுச்சீட்டுக்களின் குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 பெப்ரவரி 10 ஆந் திகதிய அமப/11/0169/555/004 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் நிதியத்தால் உழைக்கப்பட்ட நுழைவுச்சீட்டு வருமானத்தில் 25 சதவீதம் தொல்பொருள் நிலையங்களை பேணிச் செல்வதற்காக தொல்பொருள் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பிற்கு வழங்க வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டில் நிதியத்தின் வருமானமான ரூபா 3,829,262,911 தொகையில் 25 சதவீதமான ரூபா 957,315,728 தொகை அந்த நம்பிக்கைப் பொறுப்பிற்கு வழங்க வேண்டியிருந்த போதிலும், ரூபா 193,060,865 தொகை மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 03 மாதங்களில் முதிர்ச்சியடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ரூபா 582,489,594 தொகையான 06 நிலையான வைப்புக்கள் மற்றும் ரூபா 50,960,882 தொகையான ஒரு மாதத்தில் முதிர்ச்சியடையும் நிலையான வைப்பும் காணப்படும் போது நிதியத்தினால் 12 மாதங்களில் முதிர்ச்சியடையும் ரூபா 125,000,000 கூட்டுப்பெறுமதியான 02 நிலையான வைப்புக்கள் காலாவதியாவதற்கு முன்னர் மீளப் பெறப்பட்டமையின் காரணமாக 2017 ஆம் ஆண்டின் போது நிதியத்திற்கு ரூபா 13,150,343 தொகையான வட்டி வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

### 4.5 ஏனைய வெளித்தரப்பினர்களுக்கும் அரசாங்க நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட நிதியத்தின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 4.2 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட நிதியத்தின் ஆதனமொன்றான கண்டியில் அமைந்துள்ள பிறீம் றோஸ் காணி 2013 ஆம் ஆண்டு முதல் மஹரகம சாசன ஊழியர் சங்கத்தின் கண்டி சங்கமாக கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு பிக்கு பயிற்சி நிலையமொன்றாக நடாத்திச் செல்லப்பட்ட போதும், அந்த ஆதனங்களை நிதியத்திற்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்திற்குச் சொந்தமான ஹந்தானயில் அமைந்துள்ள ரூபா 4 மில்லியன் பெறுமதியான 02 கட்டிடங்கள் 2012 ஆம் ஆண்டு முதல் கட்டிடத் திணைக்களத்தால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதும், அக்கட்டிடங்களை நிதியத்திற்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

--------------------------------------------

மத்திய கலாசார நிதியத்தின் பதவியணியினர் நிர்வாகம் நலிவான நிலையில் காணப்படடுவதுடன் சில வருடங்கள் முதல் குறித்துரைத்த திட்ட முறைமைகள், ஆணைகள் மற்றும் பிரமாணங்களுக்கு முரணாக ஆட்சேர்த்தல், நியமித்தல் மற்றும் பதவியுயர்வு வழங்கியமை என்பன இடம்பெற்றிருந்தமை கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதியத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்படாத சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதி முதல் 06 மாத காலத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அந்த ஒப்பந்த காலத்தின் பின்னர் மீண்டும் 2017 பெப்ரவரி 27 ஆந் திகதி முதல் 06 மாத காலம் நீடிக்கப்பட்டிருந்தது. 2017 ஆகஸ்ட் 27 ஆந் திகதி வரையிலும் ஒரு வருட காலத்திற்காக நிதியத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் அந்த உத்தியோகத்தரே நியமிக்கப்பட்டிருந்தார். மேலும், ரூபா 45,930 தொகை மற்றும் அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளையும் உள்ளடக்கி மாதாந்த படியாக 2016 ஆகஸ்ட் 26 முதல் 2018 பெப்ரவரி மாதம் வரை ரூபா 1,164,229 தொகை நிதியத்தால் இந்த உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே நிதியத்தால் ‘‘உதவி பணிப்பாளர் / பிரதி பணிப்பாளர் (சட்டம்)’’ பதவிக்காக நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவரை சேர்ப்பதற்கு 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் 5.4 உப பிரிவின் பிரகாரம் உதவி பணிப்பாளர் (சட்டம்) பதவிக்கு 22 வயதுக்கு குறையாத 45 வயதிற்கு மேற்படாத வெளி விண்ணப்பதாரர்கள் சேர்க்கப்படுவதாக இருந்த போதிலும், உதவி பணிப்பாளர் (சட்டம்) பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட சந்தர்ப்பம் வரையிலும் இந்த உத்தியோகத்தர் அந்த ஆகக்கூடிய வயதெல்லையை விஞ்சியிருந்தார். அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு முரணாக இந்த நியமனம் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) சட்ட உத்தியோகத்தர் / உதவி பணிப்பாளர் (சட்டம்) பதவிக்குரிய கடமைப் பட்டியலின் பிரகாரம் மத்திய கலாசார நிதியத்திற்காக நீதிமன்றங்களின் வழக்கு நடவடிக்கைகளுக்கும், விசாரணைகளுக்கும் தோற்றுதல், பிணைமுறி செயற்பாடுகளுக்கு பங்குபற்றுதல், மனித உரிமை தொழில் நியாய சபைகள் மற்றும் ஏனைய விசாரணைகளுக்கு சமூகமளித்தல், உத்தரவாத ஆட்சேபனை மற்றும் ஏனைய நீதிமன்ற நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆவணங்களைத் தயாரித்தல் சட்ட உத்தியோகத்தர் / உதவிப் பணிப்பாளரின் (சட்டம்) பணிப்பொறுப்பாக இருந்தது. அதன் பிரகாரம் நிதியத்தின் சட்ட செயற்பாடுகளில் செயற்படுவதற்கு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கும் போது வெளி சட்டத்தரணிகளின் சேவையினைப் பெற்றுக்கொள்ளும் தேவை இல்லாதிருந்த போதிலும், அந்த பணிகள் வெளி சட்டத்தரணிகளின் மூலம் நிறைவேற்றப்பட்டு மீளாய்வாண்டின் போது நிதியத்தால் ரூபா 1,070,000 தொகை அதற்காக செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) கணக்காய்வினால் அவ்வவ்போது சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் பதவிகளைப் போன்றே ஆட்சேர்ப்பு நடைமுறையில் காணப்படாதிருந்த பல்வேறு பதவிகளின் பெயரின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடம்பெற்றிருந்தது. அதன் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறையில் அங்கீகரிக்கப்பட்ட 08 பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் 10 ஆட்சேர்த்தல்களும், ஆட்சேர்ப்பு நடைமுறையில் அங்கீகரிக்கப்பட்ட 05 பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை விஞ்சி ஒப்பந்த அடிப்படையில் 184

ஆட்சேர்த்தல்கள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்படாத 21 பதவிகளுக்குரிய 79 ஆட்சேர்த்தல்களுமாக 273 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(உ) நிதியத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைய மற்றும் பயிற்சி அடிப்படையில் 403 உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள், ஒப்பந்த அடிப்படையில் 251 உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள், மாவட்டங்களுக்காக 632 தொழிலாளர்கள் மற்றும் தொல்பொருளியல் திணைக்களத்திற்காக சேர்க்கப்பட்ட 934 உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் என்போருக்காக செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் படிகளின் கூட்டுமொத்தம் ரூபா 500,589,684 ஆகும்.

(ஊ) மேற்கூறப்பட்ட (உ) இன் அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட ஆட்சேர்ப்புகளுக்கு மேலதிகமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி தொல்பொருளியில் திணைக்களத்திற்காக நிதியத்தின் நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தொல்பொருள் உதவியாளர் மற்றும் காவலர்கள் மீளாய்வாண்டின் போது சேர்க்கப்பட்டிருந்தனர். 2017 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் அந்த தொல்பொருளியில் உதவியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்காக செலுத்தப்பட்ட சம்பளம், ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புப் பணம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றிற்குச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 37,228,036 ஆகும்.

(எ) பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவள அபிவிருத்தி) பதவிக்காக நிதியத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் 4.2.1.1 உப பிரிவிற்கு முரணாக தகைமையற்ற, 4.3 உப பிரிவின் பிரகாரம் உரிய வயதெல்லையை விஞ்சிய உத்தியோகத்தர் ஒருவர் 2017 ஏப்ரல் 07 ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு 2018 மே 31 ஆந் திகதி வரை ரூபா 1,253,343 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) பணிப்பாளர் (நிதி) பதவிக்காக நிதியத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் 4.2.3.1 (ஆ) உபபிரிவிற்கு முரணாக 2017 ஏப்ரல் 19 ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையில் தகைமையில்லாத உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டு 2018 மே 31 ஆந் திகதி வரை ரூபா 1,253,343 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) நிதியத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையில் உள்ளடக்கப்படாத பணிப்பாளர் (சமயம்) பதவிக்காக 2017 யூன் 21 ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்காக ரூபா 1,060,521 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஒ) ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கும் குழுவினால் புதிய ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வு நடைமுறை, விரிவாக்கம் மற்றும் அலுவலகத்திற்காக தயாரிக்கப்பட்ட ஊழியர் புள்ளி விபரம் மற்றும் நிறுவனத்தின் புதிய நிறுவகக் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்ட அறிக்கை என்பன 2018 பெப்ரவரி 14 ஆந் திகதிய கடிதம் மூலம் நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி வரை அந்த நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நிதியத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரியதாக மத்திய கலாசார நிதியத்தினால் தமது விடயப்பரப்பின் கீழ் வருகின்ற பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது என்பது தொடர்பாக அறிந்திருக்காமையின் காரணமாக அதன் பணிகள் தொடர்பான நிலையான அபிவிருத்தி நோக்கம், இலக்கு மற்றும் இலக்கை அடைய வேண்டிய கட்டங்களையும் இலக்கின் அடிப்படையில் அடையப்படாமையை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 உப பிரிவின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த நிதிக்கூற்றுக்கள் 05 மாதங்களும் 23 நாட்களும் தாமதத்தின் பின்னர் 2018 ஆகஸ்ட் 23 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

#### 6.2.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதியுரையாளரைத் தெரிவு செய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பான 2007 இன் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கும் பணிகள் தொடர்பாக நிதியத்தால் சேவை கையளிக்கும் நிபந்தனைப் பதிவேடு (TOR) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வழிகாட்டிக் கோவையின் 4.4 ஆம் பிரிவின் பிரகாரம் 2017 மே 30 ஆந் திகதிய நிர்வாக சபை பத்திர இல. 202.17.01 இன் மூலம் 03 உத்தியோகத்தர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டு அம்மூவரும் நிதியத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கும் குழுவிற்கு நியமிக்கப்பட்டிருந்தனர். அதாவது இந்த உத்தியோகத்தர்களின் அனுபவம், உத்தியோகத்தர்களுக்கு ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிப்பதற்குள்ள தகைமைகள் போன்றவை பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் நியமிக்கப்பட்டார்களா என உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) மதியுரைச் சேவை தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 4.6 ஆம் பிரிவின் பிரகாரம், ஊழியம், நேரச் செலவினம், விடுமுறை, காப்புறுதி, நாளாந்த படிகள் மற்றும் சேவை கையளித்தல் நிபந்தனைப் பதிவேடு (TOR) போன்றவற்றை மேவுகை செய்யும் வகையில் சேவை நிபந்தனைகள் உள்ளடக்கி முறையான ஒப்பந்த உடன்படிக்கையில் முடியுமான சந்தர்ப்பத்தின் போது கையொப்பமிட வேண்டும். எனினும், ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரிக்கும் குழுவுடன்

அவ்வாறான உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு நிதியத்திற்கு இயலுமாக இருந்த போதிலும், நிதியத்தால் அவ்வாறான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கவில்லை.

(ஈ) மதியுரைச் சேவைகள் தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 6.6.4 ஆம் பிரிவின் பிரகாரம், ஏற்றுக் கொள்ளக்கூடிய முற்பணம் செலுத்தும் போது காப்பீடொன்றின் அடிப்படையில் ஒப்பந்தத் தொகையில் இருபது சதவீத (20%) ஆகக்கூடியதன் அடிப்படையில் முற்பணம் செலுத்த முடியுமாக இருந்த போதிலும், அதற்கு முரணாக முற்பணம் செலுத்தும் காப்பீடு இன்றி நிதியத்தால் ஒப்பந்த தொகைகளில் 40 சதவீதமான ரூபா 360,000 தொகை முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) கொழும்பு 07 இல் அமைந்துள்ள, நிதியத்தின் பிரதான அலுவலகத்தை திருத்தும் நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் வரை நிதியத்தின் அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்கு இடமொன்றைத் தெரிவு செய்யும் போது நிதியத்தால் பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாதிருந்ததுடன் வ/ப நகர முதலீடு மற்றும் அபிவிருத்தி (தனியார்) கம்பனிக்குரிய செத்சிறிபாய II ஆவது கட்டத்தின் 4 ஆவது மாடியில் ‘‘டீ’’ பகுதி நிதியத்தின் அலுவலகத்தை வாடகை அடிப்படையில் நடாத்திச் செல்வதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தது. பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாமையின் காரணமாக, மாற்றுவழி சந்தர்ப்பங்களை மதிப்பிடுவதன் மூலம் ஆகக் குறைந்த கிரயத்துடன் நிலையமொன்றைத் தெரிவு செய்வதற்கு இருந்த சந்தர்ப்பம் நிதியத்தால் இழக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கட்டிட வாடகை, சுகாதார வசதிகளுக்கான கட்டணம் மற்றும் மின்சாரக் கட்டணமாக முறையே ரூபா 18,308,924 தொகை, ரூபா 325,283 தொகை மற்றும் ரூபா 1,040,076 தொகைகள் 2017 மார்ச் மாதம் முதல் 2018 ஏப்ரல் மாதம் வரை நிதியத்தால் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி வரையிலும் பிரதான அலுவலகத்தின் திருத்த நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நிதியத்தால் முடியாதிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் நிதியத்திற்காகத் தயாரிக்கப்பட்ட பெறுகைகள் திட்டத்தில், பிரதேச அலுவலகங்களுக்கான பெறுகைகள் மேற்கொள்ளப்பட்ட பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2017 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட பாதீட்டின் மூலம் நன்கொடையாக ரூபா 3,000,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 19,373,794 தொகை வழங்கப்பட்டிருந்தது.

### 6.4 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான வருடங்களுக்கான ஆண்டறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) கணக்கீடு | (i) | நினைவுச் சின்னங்கள், வெளியீடுகளின் கிரயத்தை இனங்கண்டிருக்காமை. |
| | (ii) | சகல கடன் மீதிகளின் சீராக்கங்களுக்குரிய நாட்குறிப்புப் பதிவுகள் சமர்ப்பிக்கப்படாமை. |
| (ஆ) பதவியணியினர் நிருவாகம் | (i) | வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்காமை மற்றும் நீண்ட காலம் முதல் சில பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டமை. |
| | (ii) | ஆட்சேர்ப்பு நடைமுறையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| | (iii) | ஆளணிக் கோவை சரியான முறையில் பராமரிக்கப்படாமை. |
| | (iv) | உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் போது நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) பெறுகைகள் | (i) | பெறுகை வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படாமை |
| | (ii) | பெறுகை திட்டம் தயாரித்தலில் குறைபாடுகள் காணப்பட்டமை. |
| (ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு | | மதிப்பீடு தயாரித்தலில் குறைபாடுகள் காணப்பட்டமை. |
| (உ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | | நீண்ட காலமாக காணப்படும் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |